மருத்துவ அறிவியல் தேசிய தேர்வு வாரியத்தில் 53 காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது. தகுதி: 12-ம் வகுப்பு, பட்டம், பி.இ., பி.டெக்., வயது: 18-27. ஆன்லைனில் விண்ணப்பிக்க கடைசி நாள்: 20.07.2026. விவரங்களுக்கு: natboard.edu.in

மத்திய மெக்கானிக்கல் இன்ஜினியரிங் ஆராய்ச்சி நிறுவனத்தில் 27 காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது. கல்வித்தகுதி: 10-ம் வகுப்பு/ஐடிஐ, வயது: 18-28. ஆன்லைனில் விண்ணப்பிக்க கடைசி நாள்: 03.08.2026. விவரங்களுக்கு: cmeri.res.in

மதுரை மாவட்டத்தில் ரூ.3.25 கோடியில் 4 நவீன மருத்துவ கட்டிடங்கள்

முதல்வர் விஜய் காணொலி மூலம் திறந்து வைத்தார்

மதுரை

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை சார்பில், மதுரை மாவட்டத்தில் ரூ.3.25 கோடி மதிப்பீட்டில் 4 நவீன மருத்துவக் கட்டிடங்களை முதல்வர் விஜய் காணொலி மூலம் நேற்று திறந்து வைத்தார்.

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை சார்பில் கட்டப்பட்டுள்ள மருத்துவக் கட்டிட திறப்பு விழா, சென்னை மாநிலக் கல்லூரி அரங்கில் நேற்று நடைபெற்றது. இதில், முதல்வர் விஜய் தமிழகம் முழுவதும் கட்டப்பட்டுள்ள மருத்துவக் கட்டிடங்களை காணொலி மூலம் திறந்து வைத்தார்.

அதன்படி, மதுரை மாவட்டத்தில் ரூ.65 லட்சம் மதிப்பீட்டில் செல்லம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் வட்டார பொது சுகாதாரக் கட்டிடம், ரூ.65 லட்சம் மதிப்பீட்டில் தொட்டப்பநாயக்கனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் வட்டார பொது சுகாதாரக் கட்டிடம், ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கீழவளவு புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம், ரூ.45 லட்சம் மதிப்பீட்டில் கிடாரிப்பட்டியில் அரசு துணை சுகாதார நிலைய கட்டிடம் என மொத்தம் ரூ.3.25 கோடி மதிப்பீட்டில் 4 மருத்துவக் கட்டிடங்கள் பொதுமக்கள் பயன்பாட்டுக்காக திறந்து வைக்கப்பட்டன.

செல்லம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் பயனாளிகளுக்கு தாய்–சேய் நலப் பெட்டகத்தை வழங்கிய மாவட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா, உசிலம்பட்டி எம்எல்ஏ விஜய். உடன் மாவட்ட சுகாதார அலுவலர் பொற்செல்வன் உள்ளிட்டோர்.

அதைத் தொடர்ந்து, மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே உள்ள செல்லம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் நடைபெற்ற விழாவில், அங்கு கட்டப்பட்டுள்ள புதிய வட்டார பொது சுகாதார கட்டிடத்தை மாவட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா, உசிலம்பட்டி எம்எல்ஏ விஜய், ஆகியோர் குத்துவிளக்கேற்றி வைத்து, பயனாளிகளுக்குத் தாய்-சேய் நலப் பெட்டகங்களை வழங்கினர்.

இந்நிகழ்வில், சார் ஆட்சியர் உட்கர்ஷ் குமார், மாவட்டச் சுகாதார அலுவலர் பொற்செல்வன், அரசு அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

ஆண்டிபட்டி அடகு கடையில் 64 பேரிடம் நகை மோசடி

ஆண்டிபட்டி

ஆண்டிபட்டி அருகே ரோசனப்பட்டியைச் சேர்ந்தவர் ரமேஷ்(39). இவர் 2024 ஜூலை 18-ம் தேதி ஆண்டிபட்டி அரசு மருத்துவமனை அருகே துரைமுருகன் என்பவரது அடகு கடையில் 49 கிராம் நகையை வைத்து ரூ.1.68 லட்சம் கடன் பெற்றார்.

இந்நிலையில், கடந்த 13-ம் தேதி தனது நகையை திருப்பச் சென்றபோது கடை மூடப்பட்டிருந்தது. அருகில் உள்ளவர்களிடம் விசாரித்தபோது தலைமறைவானது தெரிய வந்தது. இதனைத் தொடர்ந்து, மாவட்ட குற்றப்பிரிவு போலீஸாரிடம் புகார் அளித்தார். விசாரணையில் 64 நபர்களிடம் ஆயிரத்து 111 கிராம் நகையை மோசடி செய்து ஏமாற்றியது தெரிய வந்தது.

இதனைத்தொடர்ந்து துரைமுருகன், அவரது தந்தை முருகேசன், கடையில் வேலை பார்த்த ஸ்ரீமதி ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்து போலீஸார் விசாரிக்கின்றனர்.

சாட்சியை மிரட்டியவருக்கு 2 ஆண்டுகள் சிறை

வருசநாடு

வருசநாடு அருகே சீலமுத்தையாபுரத்தைச் சேர்ந்தவர் அய்யனார்(31). இவர் தனது அண்ணன் பெருமாளை(50) 2022 செப்டம்பர் 17-ல் வெட்டிக் கொலை செய்தார். சாட்சியாக இவரது இன்னொரு அண்ணன் மலைச்சாமி(45) இந்த வழக்கில் சேர்க்கப்பட்டிருந்தார். கடந்த ஆண்டு ஜாமீனில் வெளிவந்த அய்யனார், தனக்குச் சாதகமாக சாட்சி அளிக்காவிட்டால் கொன்று விடுவதாக மலைச்சாமிக்கு மிரட்டல் விடுத்தார். இதுகுறித்து தேனி மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடந்த விசாரணை நேற்று முடிவடைந்த நிலையில், நீதிபதி ஸ்ரீதேவி 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

பயிர் பாதுகாப்பு விளக்க கூட்டம்

மதுரை

மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வேளாண் தோட்டக்கலை அலுவலர்களுக்கான பூச்சி கண்காணிப்பு, பயிர் பாதுகாப்பு விளக்கக் கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்துக்கு வேளாண் இணை இயக்குநர் (பொறுப்பு) ராணி, தோட்டக்கலை துணை இயக்குநர் பிரபா ஆகியோர் தலைமை வகித்தனர்.

ஆயுதங்களுடன் இருந்தவர்களை பிடிக்க சென்ற போலீஸ்காரருக்கு வெட்டு

மதுரை

மதுரை அருகே ஆயுதங்களுடன் கூடியிருந்தவர்களை பிடிக்கச் சென்ற குற்றப் பிரிவு போலீஸ்காரருக்கு தலையில் வெட்டு விழுந்தது. இதில் பலத்த காயமடைந்த அவரை போலீஸார் மீட்டு தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர்.

திருப்பரங்குன்றம் அருகே பெருங்குடி பகுதியிலுள்ள தனியார் பயணியர் விடுதி பக்கத்தில் ஆயுதங்களுடன் 3 பேர் கூடியிருப்பதாக மாவட்ட குற்றத்தடுப்பு போலீஸாருக்கு நேற்று முன்தினம் இரவு தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து, திருமங்கலம் டிஎஸ்பியின் சிறப்பு குற்றத்தடுப்பு பிரிவு காவலர் ராஜா சீருடையின்றி சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளார். அங்கிருந்த 3 பேரிடமும் பெயர் விவரம் விசாரித்துள்ளார். அவர்கள், ராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகிலுள்ள காடமங்கலம் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிந்தது. தொடர்ந்து அவர்களிடம் விசாரித்தபோது, ஆத்திரமடைந்த அவர்கள் கற்கள், மறைத்து வைத்திருந்த ஆயுதங்களால் ராஜாவை சரமாரியாக தாக்கினர். இதில் அவருக்கு தலை, கை, இடுப்பு போன்ற இடங்களில் பலத்த காயம் ஏற்பட்டது. காவலர் அலறி சத்தம் போட்டதால் 3 பேரும் அங்கிருந்து தப்பினர்.

இது பற்றி தகவல் அறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற பெருங்குடி போலீஸார் காயமடைந்து கிடந்த ராஜாவை மீட்டு தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இச்சம்பவம் குறித்து பெருங்குடி போலீஸார் வழக்குப் பதிவு செய்து ராஜாவை தாக்கியவர்களை தேடிய நிலையில், சிசிடிவி பதிவுகள் மூலம் வில்லாபுரம் பகுதியைச் சேர்ந்த முகேஷ், கமுதி காடமங்கலம் பகுதியைச் சேர்ந்த முத்துக்காளை, பாண்டியராஜா ஆகிய 3 பேரை போலீஸார் பிடித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

பணம் வைத்து சூதாடிய 11 பேர் கைது ரூ.4.21 லட்சம், 11 பைக்குகள் பறிமுதல்

மதுரை

செக்கானூரணி அருகே லட்சக்கணக்கில் பணம் வைத்து சட்டவிரோதமாக சூதாடிய 11 பேரை கைது செய்து, அவர்களிடமிருந்து ரூ.4.21 லட்சம் மற்றும் 11 இரு சக்கர வாகனங்களை போலீஸார் பறிமுதல் செய்தனர்.

மதுரை செக்கானூரணி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் சுப்புலட்சுமி தலைமையில் போலீஸார் நேற்று முன்தினம் இரவு பொன்னமங்கலம் கண்மாய் பகுதியில் ரோந்து சென்றனர். அப்போது, கண்மாய்க்குள் செல்போன் வெளிச்சம் தெரிந்துள்ளது. சந்தேகமடைந்த போலீஸார், அங்கு சென்றபோது 10-க்கும் மேற்பட்டோர் பணம் வைத்து சூதாடியது தெரியவந்தது. போலீஸார் அவர்களை சுற்றி வளைத்தனர். ஆனால், 7 பேர் தப்பியதை அடுத்து எஞ்சிய 11 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து ரூ.4.21 லட்சம் மற்றும் 11 பைக்குகள், 15 செல்போன்கள், சீட்டுக்கட்டுகள், டீ பிளாஸ்க்குகளை பறிமுதல் செய்தனர்.

சூதாட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் இருந்து போலீஸார் பறிமுதல் செய்த செல்போன்கள், ரூ.4.21 லட்சம் பணம்.

ப்ருடென்ட் ARC லிமிடெட்

பதிவு மற்றும் கார்ப்பரேட் அலுவலகம்: 611, D மால், மனை எண். A-1 நேதாஜி சுபாஷ் பிளேஸ், பிதாம்புரா, புது டெல்லி-110 034. Tel: +91-11-45320000 | Email Id: info@prudentarc.com
CIN: U74900DL2011PLC225445

கோரிக்கை அறிவிப்பு

பின்வரும் கடன்தார்கள் மற்றும் (இணை-கடன்தார்கள்) வங்கியிடமிருந்து தாங்கள் பெற்ற கடன் வசதிகளுக்கான அசல் மற்றும் வட்டித் தொகையைத் திருப்பிச் செலுத்துவதில் தவறியுள்ளனர் என்பதையும், அத்தகைய கடன்கள் "செயல்படாத சொத்துக்களாக (NPA) வகைப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் இந்த அறிவிப்பின் வாயிலாகத் தெரிவிக்கிறோம். "நிதிச் சொத்துக்களின் பிணையமாக்கல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையை வட்டி அமலாக்கச் சட்டம் 2002"-ன் பிரிவு 13(2)-ன்கீழ், இவர்களுக்குத் தெரிவிருந்திருந்த கடைசி முகவரிகளுக்கு அறிவிப்புகள் அனுப்பப்பட்டன, ஆயினும், அவ் அறிவிப்புகள் விநியோகிக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்பட்டுவிட்டன, எனவே, இப்பொது அறிவிப்பின் வாயிலாக அவர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படுகிறது.

வ. எ ண்.	கடன்தாரர் பெயர் / கடன் கணக்கு	சொத்துக்கள் விவரங்கள்/அமலாக்கம் செய்யவுள்ள பாதுகாப்பு சொத்துக்களின் முகவரி	அறிவிப்பு நாள்	NPA நாள்	நிலுவைத் தொகை (அறிவிப்பு தேதியின்படி)
2	MAHALAKSHMI VEGETABLES / HCFR-JPSEC00001037881	விருதுநகர் மாவட்டம், விருதுநகர் பதிவு மாவட்டம், கீலராஜகுலராமன் சார்-பதிவாளர் அலுவலகம் எல்லை, வெம்பகோட்டை (முன்னதாக) ராஜபாளையம்) தாலுகா, குறிச்சியார்பட்டி கிராமம், அயன் புளுசை சர்வே எண். 16/E, பரப்பு 1.13.5 ஹெக்டேர்க்கான 2 ஏக்கர் 80 சென்ட்ஸ் நிலம் "செந்திலாண்டவர் நகர்" என்ற பெயரில் மனைகளாக பிரிக்கப்பட்டது, இதில் மனை எண்.37 நிலம் பரப்பளவு : கிழக்கு மேற்கு: 30 அடி தெற்கு வடக்கு : 40 அடி, மொத்த பரப்பு 1200 சதுர அடி அதாவது111.48 சதுர மீட்டர் இதில் 2.75 சென்ட்ஸ் நிலம் மற்றும் நான்கு எல்லைகள் கிழக்கு : திரு. தங்கராவ் அவர்களின் மனை எண்.36, மேற்கு : திரு. M. செல்வராஜ் மற்றும் திரு. M. முத்துகிருஷ்ணன் அவர்களின் மனை எண். 38-ல் மீதமுள்ள நிலம், வடக்கு : திரு. சுந்தராராஜன் அவர்களின் மனை எண்.62, தெற்கு : 16 அடி அகல கிழக்கு-மேற்கு தெரு நிலம் மற்றும் எல்லைகள், மற்றும் அனைத்து அடிப்படை உரிமைகள் மற்றும் பாதை. மேற்கூறிய சொத்து மறுசர்வே எண். 16/3 (ஹெக்.. 0.84.5) பட்டா எண். 103, முன்னதாக சர்வே எண். 16/1E1A. குறிச்சியார்பட்டி பஞ்சாயத்து ராஜபாளையம் பஞ்சாயத்து யூனியன் எல்லைக்கு உட்பட்ட சொத்து.	02-06-2026	04-03-2025	Rs.4,54,250 (21/05/2026)
3	SAKTHI GIRLS BEAUTY PARLOUR TAILORING / UGTH-EMS0000026026	தேனி மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், போடிநாயக்கனூர் தாலுகா, போடிநாயக்கனுஸர் SRO, B. மீனாட்சிபுரம் கிராமம் மற்றும் பஞ்சாயத்து, பழைய நத்தம் சர்வே எண். 343/யுகதி, துணை பிரிவின்படி வீட்டு சைட் தோராய பட்டா எண். 955, புதிய நத்தம் சர்வே எண். 474/9, வார்டு எண்.11, மாரியம்மன் கோவில் தெரு, கதவு எண். 10/2, பரப்பு 251 சதுர அடி (கிழக்கு-மேற்கு: 18.25 அடி, தெற்கு-வடக்கு : 13.75 அடி) வீட்டு சைட் சொத்து, மற்றும் வீட்டு சைட்டில் மனுதாரர் கட்டிடம் ஆர்சிசி வீட்டு கட்டிடம், அதன் மின்சாரம் இணைப்பு, மனுதாரருக்கு சொத்தின் கிழக்கு பக்கம் பாதை உரிமை உள்ளது மற்றும் வழக்கமான பாதை உரிமைகள் மற்றும் அதன் அனைத்து வசதிகள். **எல்லைகள்: வடக்கு :** S.P. சுப்பிரமணியன் அவர்களின் வீடு, சர்வே எண். 478/8, **தெற்கு :** பொன்னுதாய் மற்றும் பங்களூம் அவர்களின் வீடுகள் சர்வே எண். 474/10, கிழக்கு : தெரு சர்வே எண். 475/1, மேற்கு : S.P. தங்கராஜ் அவர்களின் வீடு சர்வே எண். 474/4.	02-06-2026	04-05-2025	Rs.6,18,618 (21/05/2026)
4	SS THIRU KAVI MUSHROOM FARM / HCFTHESEC00001041766	தேனி மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், சின்னமனூர் SRO, சின்னவாழபுரம் கிராமம், பழைய வார்டு எண்.4, தற்போது வார்டு எண்.7, தெற்கு தெரு, நத்தம் சர்வே எண். 13/1, துணை பிரிவின்படி புதிய பட்டா எண். 734, புதிய சர்வே எண். 314/9, பரப்பு 379.5 சதுர அடி (கிழக்கு-மேற்கு : 16.5 அடி, தெற்கு-வடக்கு 23 அடி) வீட்டு சைட் சொத்து, மற்றும் வீட்டு சைட்டில் மனுதாரர் கட்டிய ஆர்சிசி வீட்டு கட்டிடம், அதில் மனுதாரருக்கு பாதை உரிமை உள்ளது மற்றும் மின்சாரம் இணைப்பு, மனுதாரருக்கு தனிப்பட்ட சுவர் உரிமை தெற்கு மற்றும் வடக்கு பக்கங்கள் கூறிய சொத்தில் உள்ளது, பொது சுவர் உரிமை கிழக்கு மற்றும் மேற்கு பக்கம் கூறிய சொத்தில், கூறிய சொத்தில் தெற்கு பக்கம் பாதை உரிமை மனுதாரருக்கு உள்ளது, தண்ணீர் வெளியேற்றும் உரிமை அதே ஏரியாவில் உள்ளது, மற்றும் வழக்கமான பாதை உரிமைகள் மற்றும் அதன் அனைத்து வசதிகள் **எல்லைகள் : வடக்கு :** ராஜேந்திரன் அவர்களின் வீடு, **கிழக்கு :** ராமராஜ் அவர்களின் வீடு, **மேற்கு :** பொன்ராஜ் அவர்களின் வீடு, **தெற்கு :** கிழக்கு-மேற்கு தெரு.	02-06-2026	08-04-2025	Rs.5,69,055 (21/05/2026)
5	"MARICHAMY DAIRY FARM / UGTH-EMS0000041339 &UGTH-EMS0000004264 "	தேனி மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், கடமலைகுண்டு SRO, கடமலைகுண்டு கிராமம், பாலூத்து புலம், இணை பட்டா எண். 1418, சர்வே எண். 367/3 பரப்பு 2 ஏக்கர் 21 சென்ட்ஸ், மற்றும் கிழக்கு பக்கம் பரப்பு 1 ஏக்கர் 01 சென்ட்ஸ், மற்றும் தெற்கு மேற்கு பக்கம் கார்னர் பரப்பு, மனுதாரருக்கு 4 சென்ட்ஸ் பரப்பு உள்ளது மற்றும் வழக்கமான பாதை உரிமைகள் மற்றும் அதன் அனைத்து வசதிகள். தற்போது சொத்து பட்டா எண். 7860, புதிய சர்வே எண். 367/3பி. **எல்லைகள் : வடக்கு :** மாரிச்சாமி அவர்களின் நிலம், **கிழக்கு :** மாரிச்சாமி அவர்களின் மீதமுள்ள நிலம், **மேற்கு :** காளிமுத்து அவர்களின் சொத்து, **தெற்கு :** கிழக்கு-மேற்கு தெரு.	02-06-2026	02-07-2025	Rs.33,35,401 (21/05/2026)
15	"SELVARANI BRICK INDUSTRY / UGDINMS00000102 14"	ஆவணம் எண். 1823/2020, திண்டுக்கல் பதிவு மாவட்டம், சானார்பட்டி சார் பதிவு மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு தாலுகா, ராஜக்காபட்டி கிராமம், மனை எண். 183, ச.எண். 863/7 அளவுகள் 03 சென்ட்ஸ் சமமான 1308 சதுர அடி **எல்லைகள்: தெற்கு:** 20 அடி அகல தெரு, **மேற்கு:** மனை எண். 182, **வடக்கு:** மனை எண். 178, **கிழக்கு:** மனை எண்.184. ஆவணம் எண். 1825/2020, திண்டுக்கல் பதிவு மாவட்டம், சானார்பட்டி சார் பதிவு மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு தாலுகா, ராஜக்காபட்டி கிராமம், மனை எண். 182, ச.எண். 863/7 அளவுகள் கிழக்கு மேற்கு 33 1/2 அடி இருபக்கமும், வடக்கு தெற்கு 40 அடி இருபக்கமும், அனைத்து அளவுகள் 1340 சதுர அடி, **எல்லைகள்: தெற்கு:** தெரு, **மேற்கு:** மனை எண். 181, **வடக்கு:** மனை எண்.179, **கிழக்கு:** மனை எண்.183.	02-06-2026	02-07-2024	Rs.10,55,601 (21/05/2026)
17	"AJR FURNITURE AND HOME APPLIANCES / UG-MADMS0000051059 &UG-MADMS0000017454 "	**சொத்து: 1** திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் பதிவு மாவட்டம், அய்யம்பாளையம் சார்-பதிவு அலுவலகம், நிலகோட்டை தாலுகா, சேவுகம்பட்டி கிராமம், சர்வே எண். 1001/3 பரப்பு 0.62.50 ஹெக்டேர் சமமான 1 ஏக்கர் 54 சென்ட்ஸ், இதில் கிழக்கு பகுதி 53 சென்ட் தவிர்த்து மீதமுள்ள மேற்கு பகுதி 1 ஏக்கர் 1 சென்ட்ஸ் இதில் மேற்கு பக்கம் 0.22.85 ஹெக்டேர் சமமான 56 சென்ட்ஸ் இதில் தெற்கு பக்கம் பொது பாதை தவிர்த்து, மீதமுள்ள வடக்கு பக்கம் இதில் தெற்கு கிழக்கு கார்னர் மேற்கு பக்கம் அடுத்து J. மாரியாராத்தி வாங்கியது, மேற்கு பக்கம் அடுத்து, மொத்தம் பரப்பு 3 சென்ட்ஸ் சமமான 1305 சதுர அடி சொத்து மற்றும் பின்வரும் **எல்லைகள்: வடக்கு :** 16 அடி அகல கிழக்கு-மேற்கு பொது பாதை, **கிழக்கு:** மாரியாராத்தி அவர்களின் சொத்து, **மேற்கு:** மாரியசந்தானமாரி என்கின்ற ஸ்வீட்டி அவர்களின் சொத்து, **தெற்கு :** 25 அடி அகல கிழக்கு மேற்கு பொது பாதை மற்றும் இந்த சொத்து கிழக்கு-மேற்கு 30 அடி வடக்காக மற்றும் தெற்கு, வடக்கு-தெற்கு 43 1/2 அடி கிழக்காக மற்றும் மேற்கு, மொத்த பரப்பு 1305 சதுர அடி சமமான 121.29 சதுர மீட்டர் சொத்து மற்றும் மற்ற அனைத்து வசதிகள் அத்துடன் அனைத்து பாதை உரிமைகள். தற்போது புதிய பட்டா எண். 1736, புதிய சர்வே எண். 1001/3A1A1, Hec.0.30.94. **சொத்து:2** திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் பதிவு மாவட்டம், அய்யம்பாளையம் சார்-பதிவு அலுவலகம், நிலகோட்டை தாலுகா, சேவுகம்பட்டி கிராமம், சர்வே எண். 1001/3 பரப்பு 0.62.50 ஹெக்டேர் சமமான 1 ஏக்கர் 54 சென்ட்ஸ், இதில் கிழக்கு பகுதி 53 சென்ட் தவிர்த்து மீதமுள்ள மேற்கு பகுதி 1 ஏக்கர் 1 சென்ட்ஸ் இதில் மேற்கு பக்கம் 0.22.85 ஹெக்டேர் சமமான 56 சென்ட்ஸ் இதில் தெற்கு பக்கம் பொது பாதை தவிர்த்து, மீதமுள்ள வடக்கு பக்கம் இதில் தெற்கு கிழக்கு கார்னர் பரப்பு 5 சென்ட்ஸ் சொத்து மற்றும் பின்வரும் **எல்லைகள்: கிழக்கு :** துக்கம்மாள் அவர்களின் சொத்து (M/o. கருப்பையா), **தெற்கு,** 25 அடி அகல கிழக்கு-மேற்கு பொது பாதை, **மேற்கு:** J. மாரியராதி அவர்களின் சொத்து, **வடக்கு :** 16 அடி அகல கிழக்கு-மேற்கு பொது பாதை மற்றும் இதில் சொத்து அளவுகள் கிழக்கு-மேற்கு 50 1/2 அடி வடக்காக மற்றும் தெற்கு, வடக்கு-தெற்கு 43 1/2 அடி கிழக்காக மற்றும் மேற்கு மொத்த பரப்பு 2196 3/4 அடி சமமான 204.16 சதுர மீட்டர் சொத்து மற்றும் அனைத்து வைப்புகள் மற்றும் பிட்டிங்ஸ் மற்றும் மற்ற அனைத்து வசதிகள் அத்துடன் அனைத்து பாதை உரிமைகள். மேற்கூறிய சொத்து பழைய சர்வே எண். 1001/3, புதிய சர்வே எண். 1001/3A1A1, பட்டா எண்.1736.	02-06-2026	01-09-2025	Rs.19,78,977 (20/05/2026)
18	"Bps Refrigeration and Air conditioning / HCFMAD-SEC00001045175"	மதுரை மாவட்டம், மதுரை வடக்கு பதிவு மாவட்டம், முன்னதாக சொக்கிகுளம் சார் பதிவு அலுவலகம், தற்போது செட்டிகுளம் பதிவு அலுவலகம், மதுரை வடக்கு தாலுகா, கூடலபாண்டி கிராமம், நத்தம் சர்வே எண். 29/2, இதில் மனை எண். 15, பரப்பு 1,304 சதுர அடி சொத்து மற்றும் பின்வரும் **எல்லைகள்: வடக்கு:** குருசாமி அவர்களின் சொத்து, **தெற்கு :** மாரகம் அவர்களின் சொத்து, **கிழக்கு :** வேல்முருகன் அவர்களின் சொத்து, **மேற்கு :** வடக்கு-தெற்கு சாலை. இந்த சொத்தின் அளவுகள் கிழக்கு-மேற்கு 43 அடி வடக்காக, 36 அடி தெற்காக, வடக்கு-தெற்கு 33 அடி கிழக்காக மற்றும் 3 அடி மேற்காக மொத்தம் பரப்பு 1,304 சதுர அடி சொத்து மற்றும் அனைத்து வைப்புகள் மற்றும் பிட்டிங்ஸ் மற்றும் அனைத்து வசதிகள் அத்துடன் அனைத்து பாதை உரிமைகள்.	02-06-2026	01-10-2025	Rs.5,04,187 (20/05/2026)
19	"Sri Ganesh Vasantham Store / UG-MADMS0000042474 &HCFMAD-SEC00001017829"	தெப்பகுளம் சார் பதிவு அலுவலகம், மதுரை வடக்கு தாலுகா, ஆண்டார்கோட்டம் கிராமம், மறுசர்வே எண்கள். 60/3ஏ மற்றும் 60/3பி மொத்தம் பரப்பு 1 ஏக்கர் 31 சென்ட்ஸ் சொத்து பல்வேறு வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டது இதில் மனை எண்.17 பரப்பு 2531 சதுர அடி சொத்து மற்றும் பின்வரும் **எல்லைகள்: வடக்கு:** மனை எண்.18, **கிழக்கு :** சாலை, **மேற்கு :** மனை எண்.8, **தெற்கு :** சொத்து சர்வே எண். 60/3ஏ9.	02-06-2026	04-03-2025	Rs.12,21,235 (20/05/2026)
20	"TBOX Home Cooked Foods / HCFMAD-SEC00001041589"	மதுரை மாவட்டம், மதுரை வடக்கு பதிவு மாவட்டம், தாமரைபட்டி சார் பதிவு அலுவலகம், தற்போது ஒத்தக்கடை சார் பதிவு அலுவலகம், தற்போது மதுரை வடக்கு இணை-1 சார் பதிவு அலுவலகம், மதுரை வடக்கு தாலுகா, தற்போது மதுரை கிழக்கு தாலுகா, உத்தன்குடி கிராமம், சர்வே எண். 130/1பி இதில் 1 ஏக்கர் 69 சென்ட்ஸ் இதில் வடக்கு மத்திய பகுதி பரப்பு 1360 சதுர அடி சொத்து மற்றும் பின்வரும் **எல்லைகள்: வடக்கு:** K.P. மனோகரன் மற்றும் கண்ணாத்தாள் (W/o. மடகத்தான்) அவர்களின் சொத்து, **கிழக்கு :** பழனியாண்டி முதலியார் மற்றும் மற்றவர்களின் சொத்து, **மேற்கு :** வடக்கு-தெற்கு தெரு, **தெற்கு :** கிழக்கு-மேற்கு தெரு மற்றும் இந்த சொத்து அளவுகள் கிழக்கு-மேற்கு 34 அடி வடக்காக மற்றும் தெற்கு, வடக்கு-தெற்கு 40 அடி கிழக்காக மற்றும் மேற்கு, மொத்த பரப்பு 1360 சதுர அடி சமமான 3 சென்ட் 52 சதுர அடி காலி சைட் இதில் கட்டப்பட்ட கட்டிடம், கதவு எண். 3/20, வரி அசெஸ்புமெண்ட் எண். 903971 மற்றும் அனைத்து வைப்புகள் மற்றும் மற்ற அனைத்து வசதிகள் அத்துடன் அனைத்து பாதை உரிமைகள்.	02-06-2026	01-02-2025	Rs.16,93,605 (20/05/2026)

மேற்கூறிய கடன்தாரர்(கள்) மற்றும்/அல்லது அவர்களின் ஜாமீன்தாரர்(கள்) (பொருந்தும் இடங்களில்), இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் நிலுவைத் தொகையைச் செலுத்துமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு செலுத்தத் தவறும்பட்சத்தில் இந்த அறிவிப்புத் தேதியிலிருந்து 60 நாட்கள் நிறைவடைந்த பிறகு "நிதிச் சொத்துக்களின் பிணையமாக்கல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையை நலன்களை அமலாக்குதல் சட்டம் 2002"-ன் பிரிவு 13-ன் துணைப்பிரிவு (4)-ன்கீழ் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பிணையச் சொத்துக்களை மீட்டெடுப்பதற்குரிய கால அவகாசம் தொடர்பாக, அச்சட்டத்தின் பிரிவு 13-ன் துணைப்பிரிவு (8)-ல் உள்ள விதிமுறைகளின்படி கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

நாள் : 15.07.2026, இடம் : தமிழ்நாடு

Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ப்ருடென்ட் ARC லிமிடெட்

உங்களில் நடப்பவை

மதுரை

- காமராஜர் பிறந்த நாள் விழா: திருநகர் மக்கள் மன்றம், அண்ணா பூங்கா, காலை 8.
- விருதுநகர் இந்து நாடார் மேல்நிலைப் பள்ளி, பழைய குயவர்பாளையம் சாலை, பிற்பகல் 2.30.
- பண்பாட்டு இலக்கிய நிகழ்வு: திருவள்ளுவர் மன்றம், சக்தி வேலம்மாள் நகர், தலைப்பு-சேக்கிழார் அருளிய மாக்கதை, பேசுபவர்-உமாராணி, சக்தி வேலம்மாள் நகர், மாலை 5.
- மரச்சிற்ப பொருட்கள் கண்காட்சி 12-ம் நாள்: பூம்புகார் விற்பனை நிலையம், சிட்கோ தொழிற்பேட்டை வளாகம், மேலூர் சாலை, காலை 10.

தேனி

- காமராஜர் பிறந்தநாள் விழா: மினி மாரத்தான், தேனி பாரஸ்ட் ரோடு, நாடார் சரஸ்வதி மேல்நிலைப் பள்ளி, தொடங்கி வைப்பவர்-எஸ்பி பிரவீன்கவுதம், காலை 6; ரத்த தான முகாம், தொடங்கி வைப்பவர்- ஆட்சியர் இரா.வைத்திநாதன், காலை 10.

வரி விளம்பரங்கள்

பொது

பொது அறிவிப்பு

மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம், மதுரை அமர்வு.
S.A(MD).No.588 of 2005

Smt. Pechiammal and others Petitioners/Appellants
-Vs.-
C.Karuppusamy and others Respondents/Respondents
Vanitha W/o. Murugan ...15th Respondent
Minor. Kajina, D/o. Murugan ...16th Respondent
Minor. Sasikanth, S/o. Murugan ...17th Respondent
16th and 17th Respondent natural guardian Mrs.Vanitha
All are residing at: Jaripudukottai, Nallur Post, Perungudi Via, Madurai 625 022

மேற்கண்ட வழக்கில் 15ம் பிரதிவாதி வனிதா, 16ம் பிரதிவாதி கஜினா மற்றும் 17ம் பிரதிவாதி சசிகாந்த் ஆகியோர் எதிர்மனுதாரராக கட்சி சேர்க்கப்பட்டுள்ளீர்கள். மேற்படி வழக்கு 09.07.2026 அன்று விசாரணைக்கு வந்தது. தாங்கள் ஆஜராக வேண்டி 28.08.2026 அன்று ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே, தாங்களோ தங்கள் வழக்கறிஞர் மூலமாகவோ தவறாமல் ஆஜராகும்படி இதன் மூலம் தங்களுக்கு தெரியப்படுத்தப்படுகிறது.

எஸ்.ரமேஷ், B.Sc.,B.L., வழக்கறிஞர், மதுரை–20.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான க